# தொடன்கொட பிரதேச சபை
# கழுத்துறை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்காக நிதிக் கூற்றுக்கள் 2011 ஏப்ரல் 08 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 மார்ச் 26 திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் தொடன்கொட பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் போது முறையான கணக்குப் பதிவேடுகள் பேணப்பட்டுள்ளன என்றும் இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தொடன்கொட பிரதேச சபையின், செயற்பாட்டு நிலவரத்தையும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விடயங்களின் நிதிப் பெறுபேறுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு தத்துவங் களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஹியூம் குழாய்கள் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 17,716 தொகை மற்றும் வீதி நிர்மாணங்களுக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 1,047,662 தொகைகள் என்பன மீண்டெழும் செலவினமாக செலவினத் தலைப்பு 304-4 இன் கீழ் கணக்குகளுக்குக் கொண்டு வரப்பட்டிருந்தது.

(ஆ) முதலீடு செய்யப்பட்டிருந்த ஊழியர் பிணை ரூபா 60,000 தொகையினை கணக்கு வைக்கும் போது முதலீட்டுக் கணக்கிற்கு வரவு வைத்து காசுக்கணக்கில் செலவு வைக்கப்படுவதற்குப் பதிலாக ஊழியர் பிணைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு காசுக்கணக்கில் செலவில் பதிவிடப்பட்டமையினால் ஊழியர் பிணை வைப்புக் கணக்கின் மீதி மற்றும் ஊழியர் பிணை முதலீட்டுக் கணக்கின் மீதி என்பன கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருந்தது.

(இ) 2002 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையான காலப்பகுதிகளிற்குரிய கணக்காய்வுக் கட்டணத்திற்காக கணக்குகளில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 03 நிகழ்ச்சித் திட்டங்களின் செலவினத் தலைப்பு 304 இல் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலுத்தப்பட்டிருந்த மற்றும் செலுத்த வேண்டிய செலவினம் ரூபா 2,420,603 தொகையாக இருந்த போதிலும் வருமானச் செலவுக் கணக்கில் ரூபா 2,825,433 ஆகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) எரிபொருள் நிரப்பும் நிலையத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 50,000 ஆன வைப்புக்கள் வைப்புக்களாக கணக்குகளில் வைப்பதற்குப் பதிலாக முற்பணத்தின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) இலங்கை வங்கி நடைமுறைக் கணக்கில் செலவில் பதியப்பட்டிருந்த ரூபா 16,000,000 தொகை மற்றும் வங்கி மேலதிகப் பற்றுக் கட்டணமும் காசோலைக் கட்டணமும் ரூபா 4,100 தொகைகள் என்பன கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஊழியர் கடன் மீதி ரூபா 5,376,683 தொகையாக இருந்தபோதிலும் ஊழியர் கடன் பட்டோலைகளின் பிரகாரம் மீதி 5,223,551 ஆக இருந்தமையினால் ரூபா 153,132 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 27,175,543 ஆக இருந்ததுடன் 01 வருட காலத்தை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 6,292,960 ஆக இருந்தது

### 1.3.4 கணக்காய்வுக்கான சான்றுகள் இன்மை

(அ) மீதி முன்கொண்டுவரப்பட்டு தயாரிக்கப்பட்ட வைப்புப் பதிவேடு இன்மையினால் ரூபா 2,281,331 தொகையான இரண்டு வைப்பு மீதிகளும், செலுத்த வேண்டிய மற்றும் பெறவேண்டிய சகல மீதிகளும் தெரியக்கூடிய வகையில் பராமரிக்கப்பட்டிருந்த கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் பதிவேடுகள் இண்மையினால் ரூபா 3,995,234 தொகையான வேலைக் கடன்கொடுத்தோர் மற்றும் ரூபா 978,387 தொகையான வேலைக் கடன்பட்டோர் மீதிகளை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

(ஆ) வேலைக் கடன்பட்டோர் கணக்கில் வரவு வைக்கப்பட்டு திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 892,392 பெறுமதி தோற்றுவிக்கப்பட்ட முறையினைக் காட்டுகின்ற விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமைகள்

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாண அறிவுறுத்தல்கள் என்பவற்றிற்கு இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| | **இலங்கை சனநாயக ஷோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்** | |
| (i) | நிதிப்பிரமாணம் 396(ஈ) | 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் வழங்கப்பட்டிருந்தும் வங்கிக்குச் |

| | | |
|---|---|---|
| | | சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களைக் கடந்திருந்த ரூபா 17,496 பெறுமதியான 08 காசோலைகள் சம்பந்தமாக தொடர்புடைய நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 756 | தொடர்புடைய நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படவேண்டிய பொருள் மெய்மையாய்வு 2006 ஆம் ஆணடின் பின்னர் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,900,751 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 20,939,339 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

(அ) இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் 387 இன் பிரகாரம் காசோலைகள் ஊடாக கொடுப்பனவு செய்கின்ற போது காணப்பட்ட வங்கி மீதி உரிய கொடுப்பனவுகளுக்காக போதியளவில் உள்ளதா என ஆராய்ந்து பார்த்து காசோலை எழுத வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக சபையினால் மீளாய்வாண்டில் ஒரு வங்கி நடைமுறைக் கணக்கில் 2010 யூலை 02 முதல் 15 வரையும் மற்றும் 2010 திசெம்பர் 12 முதல் 16 வரையான காலப்பகுதியினுள் வங்கி மேலதிகப்பற்று ஏற்படும் வகையில் காசோலைகள் எழுதப்பட்டிருந்தன. வங்கியினால் வங்கி மேலதிகப்பற்று வட்டி மற்றும் கட்டணமாக ரூபா 6,083 அறவிடப்பட்டிருந்தன.

(ஆ) ஒரு வருமான விடயம் மற்றும் 06 செலவின விடயங்களில் மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுக்கிடையே 13% தொடக்கம் 53% வரையான வீச்சினுள் சாதகமான முரண்கள் அவதானிக்கப்பட்டதுடன் 04 வருமான விடயங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானங்களுக்கிடையே 14% தொடக்கம் 47% வரையான வீச்சினுள் பாதகமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் மீளாய்வாண்டினுள் பாதீடானது சிறந்த கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதீப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டிற்காக மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பான சமர்ப்பித்திருந்த மதீப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றி தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பீடு | உள்ள வாறான | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிலுவை | மதிப்பீடு | உள்ள வாறான | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிலுவை |
| | | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 |
| (i) | வீத வரி மற்றும் வரி | 2,361 | 1,141 | 4,633 | 2,610 | 710 | 5,955 |
| (ii) | வாடகை | 260 | 149 | 258 | 251 | 170 | 209 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 104 | 848 | 594 | 103 | 97 | 42 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 12,765 | 279 | 10,182 | 4,081 | 3,944 | 505 |

### 2.3.2 நீதி மன்றத் தண்டப்பணம்

பல்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் 03 நீதிவான் நீதிமன்றங்களினால் 2010 திசெம்பர் 31 வரை அறவிடப்பட்டு மாகாண வருமான ஆணையாளருக்கு அனுப்பியிருந்த ரூபா3,706,724 தண்டப்பணம் சபைக்கு கிடைக்க வேண்டியிருந்தது.

### 2.3.3 முத்திரைக் கட்டணம்

2010 சனவரி தொடக்கம் ஒக்டோபர் வரை மதுகம பதிவாளர் நாயகத்தின் காரியாலயத்திலிருந்து அறவிடப்பட்டு உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பியிருந்த ரூபா 1,300,801 முத்திரைக் கட்டணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

### 2.3.4 நிலுவை வருமானத்தை அறவீடு செய்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2005 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் மாட்டிறைச்சிக் கடையொன்றை வாடகைக்கு விட்டு ரூபா 38,322 தொகையும், 02 பொதுச் சந்தைகளில் 30 கடைகளிலிருந்து 1999 தொடக்கம் 2010 வரையான ஆண்டுகளுக்குரிய கடைவாடகை ரூபா 198,921 தொகையும், 2006 தொடக்கம் 2008 வரை தற்காலிக கடைகளுக்கான நிலத்துண்டுகளை வாடகைக்குவிட்டு ரூபா 21,030 தொகையும் போன்ற நிலுவை வருமானங்கள் கணக்காய்வுத் திகதியான 2011 யூலை 13 வரையிலும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஏக்கர் வரி பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் ஏக்கர் வரி பட்டியலிடல்கள் ரூபா 87,419 தொகையாக இருந்ததுடன் அதில் ரூபா 66,488 தொகை அறவிடப்பட்டிருந்த போதிலும் பல வருடகாலத்திலிருந்து ஏக்கர்வரி அறவிடப்படாமையினால் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை மீதி ரூபா 1,116,704 ஆக இருந்தது.

**2.3.5 பெகோ லோடர் இயந்திர வாடகை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பெகோ லோடர் இயந்திரத்தைக் கொள்வனவு செய்வற்காக உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெறப்பட்ட ரூபா 5,000,000 தொகைக் கடன் பணத்தை அடைப்பதற்காக மாதத்திற்கு ரூபா 176,000 தொகையான மாதாந்த இயந்திர வாடகை வருமானமொன்று எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் 2009 தொடக்கம் 2010 ஆகஸ்ட் வரை இயந்திர வாடகையாக எவ்வித வருமானமும் உழைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்ட அறிக்கையின் பிரகாரம் 2009 ஆம் ஆண்டில் மீற்றர்மணி ஒன்றிற்காக ரூபா 2,200 தொகையும், பின்னர் வருடத்திற்கு ஒரு தடவை 10% இனால் வாடகை அதிகரிக்கப்பட வேண்டுமென காட்டப்பட்டிருந்த போதிலும் 2010 ஆகஸ்ட் மாதத்தின் போது ஒரு மணிக்கான வாடகை ரூபா 1,800 வரை குறைக்கப்பட்டு திசெம்பர் வரை 78 மணிக்காக இயந்திரம் வாடகைக்கு விடப்பட்டு ரூபா 140,400 தொகை வருமானம் அறவிடப்பட்டிருந்தது.

**2.3.6 காணிவிற்பனை வரி**

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 154(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபை எல்லையினுள் அமைந்துள்ள காணியொன்று ஏலத்தில் விற்பனை செய்கின்ற போது விற்பனையின் அடிப்படையில் 1% ஆன வரி அறவீடு செய்வதற்குப் பதிலாக தலைவரின் சிபார்சின் அடிப்படையில் வரித் தொகை அறவிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் 2008, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளின் போது சபை ரூபா 1,509,660 ஆன வரியினை அறவிடு செய்திருந்தது.

(ஆ) 2008 நவம்பர் 22 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்த ஹெட்டியாகொடவத்த காணியில் பொது வதிகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த 30.7 பேர்சஸ் காணித்துண்டின் உரித்துறுதி கணக்காய்வுத் திகதியான 2011 யூலை 13 வரையிலும் சபையினால் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான சபையின் பாதீட்டு மற்றும் உள்ளவாறான செலவு உரிய முரண்களுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவு விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| | பாதீடு | உள்ளவாறான | முரண் | பாதீடு | உள்ளவாறான | முரண் |
| மீண்டுவரும் செலவுகள் | ரூபா.000' | ரூபா.000' | ரூபா.000' | ரூபா.000' | ரூபா.000' | ரூபா.000' |
| ஆளுக்குரிய வேதனம் | 20,532 | 20,001 | 531 | 21,056 | 19,169 | 1,887 |
| ஏனையவை | 18,375 | 13,315 | 5,060 | 10,978 | 24,033 | (13,055) |
| உப கூட்டுத் தொகை | 38,907 | 33,316 | 5,591 | 32,034 | 43,202 | (11,168) |
| மூலதன செலவுகள் | 12,649 | 9,523 | 3,126 | 1,630 | 4,605 | (2,975) |
| மொத்தக் கூட்டுத் தொகை | 51,556 | 42,839 | 8,717 | 33,664 | 47,807 | (14,143) |

## 2.5 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள்**

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பதவியினர் தரங்கள் | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|
| நிறைவேற்றுனர் | 03 | 02 |
| இரண்டாம் தரத்தினர் | 12 | 10 |
| ஆரம்ப தரத்தினர் | 68 | 66 |
| ஏனையவை(அமைய, தற்காலிக) | -- | 14 |

## 2.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.6.1 செயற்பாடற்ற பௌதீக வளங்கள்

2010 சனவரி மாதத்திலிருந்து செயற்பாடற்றுக் காணப்பட்ட பொப்கெட் இயந்திரம் மற்றும் 2011 சனவரியிலிருந்து செயற்பாடற்றுக் காணப்பட்ட ஜெனரேட்டர் என்பன கணக்காய்வுத் திகதியான 2011 யூலை வரையிலும் பழுதுபார்க்கப்பட்டு உபயோகத்திற்கு எடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.6.2 கிடைக்க வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா15,358,026 ஆக இருந்ததுடன் 01 வருட காலத்தை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 230,897 ஆகும்.

### 2.6.3 தீர்க்கப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

1981 தொடக்கம் 2006 வரை 25 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 173,523 தொகையான முற்பணம் நிதிப்பிரமாணம் 371(அ) இன் அறிவுறுத்தல்களின் பிரகாரம் உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கும், 2004 ஆம் ஆண்டின் ஒக்டோபர் மாதத்திற்குரிய உறுப்பினர் கொடுப்பனவு ரூபா 46,220 தொகையினை உள்ளூராட்சித் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.6.4 அறவிடப்பட வேண்டிய பதவியினர் கடன்கள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த பதவியினர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5,376,683 ஆக இருந்தது.

### 2.6.5 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

மெய்மையாய்வுச் சபை அறிக்கைகளின் மூலம் உறுதிப்படுத்தப்படாத 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு புத்தகப் பெறுமதியில் கணக்கிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 29,435,328 ஆகும்.

## 2.7 மின்சார பொருள் இருப்புக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) மின்சாரப் பொருட்கள் கொள்வனவின் போது கொள்வனவு வழிகாட்டிகளின் பிரகாரம் கூறுவிலைகள் கோரப்பட்டு கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், 2008 ஆம் ஆண்டிலிருந்து கூறுவிலைகள் கோரப்படாமல் ஒரே நிறுவனத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2010 ஆம் ஆண்டின் போது அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்டிருந்த மின்சாரப் பொருட்களின் பெறுமதி ரூபா 1,828,060 ஆகும்.

(ii) சபை அதிகாரப் பிரதேசத்தில் வீதி விளக்குகள் பொருத்தப்பட்டு மின்கம்பங்கள் இலக்கமிடப்பட்டிருக்கவில்லை.

(iii) மின்சாரப் பொருட்கள்/ உபகரணங்கள்/ மின்குமிழ்கள் விநியோகித்தல்களின் போது அவைகள் பொருத்தப்படுகின்ற இடங்கள் குறிப்படப்பட்டிருக்காததுடன் அது தொடர்பான அறிக்கைகளும் காணப்படவில்லை.

(iv) 2010 சனவரி 18 ஆந் திகதி தொடக்கம் 2010 திசெம்பர் வரை 19 சந்தர்ப்பங்களில் விநியோகிக்கப்பட்டிருந்த ரூபா 180,940 பெறுமதியான மின்சாரப் பொருட்களுக்குரிய விநியோகக் கட்டளைகளில் வேலை அத்தியட்சகர்/ தொழில்நுட்ப உத்தியோகத்தர்/ செயற்பொறுப்பு உத்தியோகத்தர் அல்லது ஏனைய உத்தியோகத்தரினது கோரிக்கைகள் குறிப்பிடப்பட்டிராததுடன் சபைச் செயலாளரின் அங்கீகாரமும் பெறப்படாமல் பொருட்கள் விநியோகிக்கப்பட்டு களஞ்சிய உத்தியோகத்தரினால் பொருட்கள் விநியோகிக்கப்பட்டமைக்கான கையொப்பமும் இடப்பட்டிருக்கவில்லை.

(v) மின்சாரப் பொருட்கள் புதிதாகப் பொருத்தும் போது கழற்றி அகற்றப்பட்டிருந்த பொருட்கள் களஞ்சியத்திற்கு கையளிக்கப்படும் நடைமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) இருப்புப் பதிவேட்டில் பதிவுகள் பென்சிலினால் எழுதப்பட்டிருந்தது.

## 2.8 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1995 மே மாதத்தின் பின்னர் சபைக்குச் சொந்தமான மற்றும் சபைக்குக் கையளிக்கப்பட்டிருந்த வீதிகள், 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 21(2) ஆம் பிரிவின் பிரகாரம் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டிராததுடன், அதன் தன்மையின் பிரகாரம் இனங்காணப்பட்டு பதிவேடுகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையில் சேவையாற்றி இடமாற்றம் பெற்றுச்சென்ற 22 உத்தியோகத்தர்களிடமிருந்தும் அறவிடவேண்டியிருந்த ரூபா 57,417 தொகையான ஊழியர் கடன் மீதியினை அறவீடு செய்வதற்கு கணக்காய்வுத் திகதியான 2011 யூலை வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.9 உள்ளகக் கணக்காய்வு

இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாண இலக்கங்கள் 128, 132, 134 மற்றும் 2008 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் WP/LGD/10/2008 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் (ஈ) பந்தியின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துககள் முகாமைத்துவம்